**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**

**OS.No.66/2014**

**வழக்கு சாட்சி DW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **வாணிஸ்ரீ** | தொழில் | : Trustee |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : பாரதி |
| கிராமம் | : நாகப்பட்டினம் | இனம் | : பெண் |
| தாலுகா | : நாகப்பட்டினம் | வயது | : 49/2026 |
| மாவட்டம் | : நாகப்பட்டினம் | நாள் | : 01.04.2026 |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். கடந்த 17.03.2026 ம் தேதி எனது தரப்பு சாட்சியமாக நான் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதன் தொடர்ச்சியாக கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 30.07.1938 தேதியிட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும்.
2. ராதாகிருஷ்ணன் நாயுடுவின் இறப்புச் சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **பி.வா.சா.ஆ.5** ஆகும்.
3. ராதாகிருஷ்ணன் நாயுடுவின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகும்.
4. 02.02.2009ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும்.
5. 04.12.2009 தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறை ஆணை அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகும்.

6. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் உள்ள பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் கணக்கு உண்மை நகல் **பி.வா.சா.ஆ.9** ஆகும்.

7. 02.08.2023 தேதியிட்ட Town Survey Land Register Extract சான்று இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.10**ஆகும்.

8. தாவா சொத்து தொடர்புடைய வில்லங்கச்சான்று நகல் **பி.வா.சா.ஆ.11** ஆகும்.

9. 02.05.2017 தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் **பி.வா.சா.ஆ.12**ஆகும்.

10. அசல் வழக்கு 16/2010ன் தீர்ப்புரை இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.13** ஆகும்.

11. குற்றவியல் பல்வகை மனு எண்.1359 of 2021 ன் மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவு நகல் **பி.வா.சா.ஆ.14** ஆகும்.

12. 26.11.2024ல் பிறப்பிக்கப்பட்ட உச்ச நீதிமன்ற உத்தரவு தொடர்புடைய நகல் **பி.வா.சா.ஆ.15** ஆகும்.

13. 19.06.2015 தேதியிட்ட உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.16** ஆகும்.

14. 25.11.2024 தேதியிட்ட கிரைய இரத்துப் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.17** ஆகும்.

15. 25.11.2024 தேதியிட்ட கிரைய இரத்துப் பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.18** ஆகும்.

16. 14.07.2025ம் தேதி நான் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் **பி.வா.சா.ஆ.19** ஆகும்.

17. 30.07.2025ம் தேதி நான் அனுப்பிய புகார் தொடர்பாக எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் நகல் **பி.வா.சா.ஆ.20** ஆகும்.

18. 14.07.2023 தேதியிட்ட தாவா சொத்து தொடர்புடைய வில்லங்கச்சான்று இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.21** ஆகும்.

19. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் செலுத்தப்பட்ட சொத்துவரி இரசீதுகள் (எண்ணம் 2) அசல் **பி.வா.சா.ஆ.22** ஆகும்.

20. 25.11.2024ம் தேதி தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் செலுத்தப்பட்ட இணையவழி சொத்துவரி இரசீது நகல் **பி.வா.சா.ஆ.23** ஆகும்.

21. தாவா சொத்து தொடர்பாக எனது பெயரில் உள்ள மின் கட்டண இரசீது நகல் **பி.வா.சா.ஆ.24** ஆகும்.

22. எனது தாயார் சாந்தக்குமாரி தொடர்புடைய இறப்புச் சான்று இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.25** ஆகும்.

23. தாவா சொத்தில் நிறுவப்பட்ட உச்சநீதிமன்ற உத்தரவு விபரம் அடங்கிய பலகை தொடர்புடைய புகைப்படம் **பி.வா.சா.ஆ.26** ஆகும்.

தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**( ஆவணங்கள் 7, 9, 10, 12, 16, 22, 23, 24 மற்றும் 26 ஆகிய ஆவணங்கள் வழக்குமூல தேதிக்கு பிந்தைய ஆவணங்கள் என்றும், அதை குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது )**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் எதிர் நடத்தி வரும் தாவா சொத்தின் விஸ்தீரணம் 46 செண்ட் நிலமாகும் . எதிர்வாதுரையில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 45 செண்ட் நிலம் என்று சொல்லியுள்ளேன் 1 செண்ட் நிலம் வழிப்பாதையாகும் . தாவா சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு நினைவில்லை. தாவா சொத்து ஆரம்பத்தில் எனது தாத்தா ராதாகிருஷ்ணன் நாயுடுவிற்கு சொந்தமானதாகும். ராதாகிருஷ்ணன் நாயுடுவிற்கு ஒரு மகன், இரண்டு

மகள்கள் உள்ளனர். மகன் பெயர் ராமதுரை, மகள்கள் பெயர் சூரிய குமாரி, சாந்த குமாரி ஆவர். சாந்தகுமாரி தான் எனது தாயார். சூரிய குமாரி எனது பெரியம்மா ஆவார். எனது உடன்பிறந்தவர்கள் ஒரு அண்ணன், ஒரு தங்கை ஆவர். என் அண்ணன் தவறிவிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணன் திருமணம் ஆன பிறகுதான் தவறிவிட்டார் என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். எனது தங்கை உயிருடன் தான் உள்ளரா என்றால் சரிதான், அவருக்கு பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். எனது பெரியம்மா சூரியகுமாரிக்கு பிள்ளைகள் உள்ளனரா என்றால் உள்ளனர்.

சூரியகுமாரியின் வாரிசுகளும், ராதாகிருஷ்ணன் நாயுடுவின் வாரிசுகள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் ராதாகிருஷ்ணன் நாயுடு இறந்த பிறகு எனது தாயார் சாந்தகுமாரி எனக்கு அதிகார முகவர் ஆவணம் அடிப்படையில் அதிகார அளித்தார் என்றால் சரிதான். அந்த அதிகார முகவர் ஆவணத்தை பி.வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணப்படி எனது தாயாருக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் கொடைக்கானல் சொத்துக்கள் சம்பந்தமாக அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தான 45 சென்ட் நிலம் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவர் அதிகார முகவர் ஆவணம் அடிப்படையில் அதிகாரம் வழங்கினார் என்றால் சரிதான். எனது தாயார் அதிகாரம் அளித்து அந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு தாவா சொத்து வந்து சேர்ந்தது என்றால் சரிதான், வாரிசு உரிமையின் அடிப்படையிலும் எனக்கு சொத்து வந்து சேர்ந்தது.

பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 45 சென்ட் நிலத்திற்கு பட்டா பெற்றேன் என்றால் சரிதான், வாரிசு உரிமையின் அடிப்படையிலும் நான் பட்டா பெற்றேன். பட்டா பெறவேண்டி எனது பெயரில் எழுதப்பட்ட பொது அதிகார ஆவணத்தை வருவாய்த்துறை அலுவலகத்தில் தாக்கல் செய்து பட்டா பெற்றேன் என்றால் சரிதான், பொது அதிகார ஆவணத்துடன் கிரைய சாசனம், உயர்நீதிமன்ற உத்தரவு, வட்டாச்சியரின் உத்தரவு, மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு ஆவணங்களை தாக்கல் செய்துதான் பட்டா பெற்றேன். மேற்சொன்ன ஆவணங்களின் அடிப்படையில் தான் எனக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் மாவட்ட வருவாய் அலுவலரை விசாரணை மேற்கொள்ள சொல்லி உத்தரவு பிறப்பித்தார். உயர்நீதிமன்ற உத்தரவு மனு

எண் விபரம் எனக்குத் தெரியாது. நான் சொல்லும் உயர்நீதிமன்ற உத்தரவின் மனு எண் WP(MD).No. 14075/2009 என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. என் வசம் உள்ள வேறு உயர்நீதிமன்ற உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வசம் உள்ள இந்த வழக்கு தாவா தொடர்புடைய அனைத்து உத்தரவுகளையும் நான் தாக்கல் செய்துள்ளேன். உயர்நீதிமன்ற பட்டா உத்தரவு ஆவணத்தை நான் என் தரப்பில் எந்த ஆவணமாக குறியீடு செய்துள்ளேன் என்றால் அதுகுறித்து எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் நான் பட்டா பெற்றதாக சொல்லப்படும் உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் , வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என் பெயரில் எந்த ஆவணங்களும் இல்லாமல் வருவாய்த்துறையால் பட்டா வழங்கப்பட்ட காரணத்தால்தான் வாதி உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணம் மற்றும் வாரிசு அடிப்படையில் பட்டா மாறுதல் மனு செய்ததன்பேரில் பட்டா வழங்கப்பட்டுள்ள நிலையில் பட்டாவில் எனது தாயார் சாந்தகுமாரி பெயரிலும், ராதாகிருஷ்ணன் நாயுடுவின் இதர வாரிசுகளின் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டதா என்றால் இல்லை, என் பெயருக்கு மட்டும்தான் பட்டா கொடுக்கப்பட்டது. எதன் அடிப்படையில் ராதாகிருஷ்ணன் நாயுடுவின் மற்ற வாரிசுகளும், எனது தாயார் பெயரும் குறிப்பிடப்படாமல் பட்டா வழங்கப்பட்டது என்றால் சூரிய குமாரி, சாந்தகுமாரி இருவர் மட்டும் ராதாகிருஷ்ணன் நாயுடுவின் வாரிசுகள். இருவரில் சூரிய குமாரி சொத்துகள் தொடர்பாக விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்ததால் சாந்தகுமாரியின் வாரிசான எனக்கு பட்டா வழங்கப்பட்டது. சூரியகுமாரி திருவாரூர் மாவட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் 1976ல் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். சூரியகுமாரி எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எனது நிரூபண வாக்குமூலத்தில் சூரியகுமாரி எழுதிக்கொடுத்த விடுதலை பத்திர விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோன்று சூரியகுமாரி எந்தவொரு விடுதலை ஆவணமும் எழுதித்தரவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கு தாவா சொத்து சம்பந்தமான 45 சென்ட் நிலத்தைப்பொறுத்து அசல் வழக்கு 16/2010 என்ற வழக்கை நான் தாக்கல்

செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ஆவணம்தான் அசல் வழக்கு 16/2010 என்ற வழக்கில் வாதுரை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் 2 வது பத்தியில் எனது தாத்தா ராதாகிருஷ்ணன் நாயுடு அறக்கட்டளை நடத்தி வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன அறக்கட்டளைக்கு என்னை Trustee ஆக நியமித்ததாக சங்கதியை அந்த வாதுரையான வா.சா.ஆ.7 ல் சொல்லியுள்ளேன் என்றால் எனது தாத்தா நியமிக்கவில்லை, மாவட்ட ஆட்சியர் தான் என்னை Trustee ஆக நியமித்தார். வா.சா.ஆ.7 ஆவணத்தில் " மேற்படி அறக்கட்டளையை பொறுப்பாக நடத்த தன் மகள் வழிப் பேத்தியான இந்த வாதியை பரம்பரை Trustee ஆக நியமித்து அவர் மூலம் நடத்தி வந்தார் " என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அறக்கட்டளையின் பெயர் ஸ்ரீ வெங்கடரமனா சுவாமி அறக்கட்டளை. வா.சா.ஆ.7 ஆவணத்தில் 2வது பத்தியில் " அந்த அறக்கட்டளைக்கு கொடைக்கானலில் உள்ள சொத்தான தாவா சொத்தையும் கொடுத்திருந்தார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தை இந்த வழக்கு தாவா சொத்து Trust சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறான சங்கதிகள் குறிப்பிடப்பட்டுள்ள வாதுரையின் அடிப்படையில்தான் அசல் வழக்கு எண்.16/2010ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் விபரங்கள் வாதுரையில் தவறுதலாக அச்சடிக்கப்பட்டுள்ளது. எனது தாத்தா ராதாகிருஷ்ணன் நாயுடு தாவா சொத்து அல்லாமல் இதர சொத்துக்களை பொறுத்து 1969ல் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தை நிறைவேற்றும் நபராக வாதியின் தந்தையான மதனகோபால் நாயுடு என்பவரை எனது தாத்தா நியமித்திருந்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. தாவா சொத்து தொடர்பாக ஏற்கனவே மதனகோபால நாயுடு என்பவருக்கு ஏற்கனவே தாவா சொத்தை கொடையாக கொடுத்த காரணத்தால்தான் எனது தாத்தா எழுதிய உயிலில் தாவா சொத்து விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

வாதி ராம்மோகன் நான் பெற்ற பட்டா செல்லாது எனச் சொல்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை வழக்கு எண்.14075/2009 என்ற வழக்கு தாக்கல் செய்து அதில் எனக்கு வழங்கப்பட்ட பட்டா செல்லாது

என்றுச்சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மேற்சொன்ன உத்தரவின்பேரில் மாவட்ட வருவாய் அலுவலர் பட்டாவை இரத்து செய்தபின் மீண்டும் விசாரணை மேற்கொண்டு என் பெயரில் பட்டா வழங்கினார் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலர் மறுவிசாரணைக்கு பின் எனது பெயரில் வழங்கப்பட்ட பட்டா உத்தரவை எதிர்த்து WP(MD).No.5959/2010 என்ற வழக்கு தொடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. WP(MD).No.5959/2010 என்ற வழக்கில் உயர்நீதிமன்றம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில் பரிகாரம் தேடிக்கொள்ளச்சொல்லி உத்தரவு பிறப்பித்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. தாவா சொத்தான 45 சென்ட் நிலத்தை வாதி ஆக்கிரமிப்பு செய்த விபரம் எனக்கு 2009ல் தான் தெரியவந்தது என்றால் ஆக்கிரமிக்கவில்லை, அவர் ஆக்கிரமிப்பு செய்ய முயன்றார் அதை நாங்கள் தடுத்துவிட்டோம்.

2009ல் தாவா சொத்து எனது அனுபவத்தில்தான் இருந்தது. 1938 முதல் தாவா சொத்து தொடர்புடைய வரி வகையறா ராதாகிருஷ்ணன் நாயுடு பெயரில் தான் செலுத்தி வரப்பட்டது. மேற்சொன்ன இரசீதுகளை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுனாமியில் எனது ஆவணங்களான கிஸ்தி இரசீதுகள் சென்றுவிட்டதாக அதுகுறித்த வபரத்தை எனது வாதுரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சுனாமியில் ஆவணங்கள் தொலைந்துவிட்டதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 1961 முதல் வாதி ராம்மோகன் குடும்பத்தார் அனுபவத்தில் தான் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. 1961 முதல் 1 ஏக்கர் 50 சென்ட் நிலத்திற்கு வாதி ராம்மோகன் தகப்பனார் மதனகோபால் நாயுடு பெயரில்தான் வரி வகையறா செலுத்தி வரப்படுகிறது என்றால் சரியல்ல. வாதிக்கு தொடர்புடைய தாவா சொத்தில் கிருஷ்ணம்மாள் என்பவர் பெயரில் பட்டா ஏற்பட்டதன் காரணமாக வாதி வருவாய்த்துறையில் மனு செய்து பிறகு மீண்டும் வாதி பெயரில் பட்டா மாற்றப்பட்ட விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

கிருஷ்ணம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வட்டாச்சியர் 1 ஏக்கர் 50 சென்ட் நிலம் வாதி ராம் மோகனுக்கு சுவாதீனம் உடையது என தீர்மானித்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் என் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் உரிமைக்கோர மாட்டோம் என ஆவணம் ஏதேனும் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார்கள். எனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்திருந்ததாகவும், அதை 2009 ல் கண்டறிந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.166/2009 என்ற வழக்கு 2015ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. 4ம் பிரதிவாதி பிரசாத்திற்கு 2012ல் நான் தாவா சொத்து தொடர்பாக கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையம் தொடர்புடைய ஆவணம் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஆவணம் 5ம் பக்கத்தில் 3வது பத்தியில் " அசல் வழக்கு எண்.166/2009 தேதி 09.11.2009 தீர்ப்பின் அடிப்படையிலும் நிலம் எங்களுக்குதான் சொந்தம் " என்ற சங்கதியைக் குறிப்பிட்டு கிரையம் முடித்துக்கொடுத்தேன் என்ற சங்கதி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 கிரைய ஆவணம் நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை. வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரைய ஆவணப்படி எந்தவொரு கிரையத்தொகையும் கை மாறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லாது என்றால் சரிதான், அதுகுறித்து உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தீர்ப்பு வழங்கிவிட்டது. மேற்சொன்ன இரண்டு ஆவணங்களும் செல்லாது என்றுச்சொல்லிதான் வாதி ராம்மோகன் செல்லாது என்று சொல்லிதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் செல்லாது என்றுச்சொல்லி வாதி தீர்வு கோர உரிமையில்லை. தாவா சொத்திற்கும், எனக்கும் உரிமையில்லை என்றாலும், தாவா சொத்தை அபகரிக்கவேண்டி போலியாக ஆவணம் உற்பத்தி செய்து வழக்கை எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.16/2010 என்ற வழக்கில் என் சார்பாக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.16/2010 என்ற வழக்கு தொடர்பாக வாதி ராம்மோகன் AS.No.49/2015 என்ற வழக்கை சார்பு

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

AS.No.49/2015 என்ற வழக்கு நடைபெற்று அதில் வாதி ராம்மோகன் சார்பாக வழக்கு தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல, மேல்முறையீடு வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு எனது 45 செண்ட் நிலத்தில் ராம்மோகன் வரக்கூடாது என்றுச்சொல்லிதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. AS.No.49/2015 என்ற வழக்கில் என் சார்பாக எந்தவொரு தீர்வும் வழங்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பழனி சார்பு நீதிமன்றத்தில் AS.No.49/2015ல் எனக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்றுச் சொல்லிதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மின் இணைப்பு கட்டண இரசீது மற்றும் வீட்டுவரி இரசீதுகள் இந்த வழக்கு தாவா தொடுத்த பிறகு பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.166/2009 நிலுவையில் இருக்கும்போதே அதில் எனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டதாக பொய்யான சங்கதிகளைச் சொல்லி கிரைய ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.16 ஆவணம் எனது தாயாரின் உயில் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.16 இந்த வழக்கு தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்தில் தாவா சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2012ல் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாகச் சொல்லிவிட்டு 2015ல் அதே கிரையம் கொடுத்த சொத்தை காண்பித்து போலியான உயில் ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து எனக்கு எந்த விபரங்களும் தெரியாது என்றாலும், எனவே தாவா சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவசர நோக்கோடு ஆவணங்களை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் செல்லாது என்பதால் தாவாப்படி தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.01 17:37:12 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.